

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் – கீதா சுரேஷ் இல்ல மண விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்கள் எஸ்.ஜூட் பரத் – டாக்டர் பி.எஸ்.கிறிஸ்டினா ஜெயசீலி ஆகியோரை வாழ்த்தினார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை 52–வது வட்ட துணைச் செயலாளர், அண்ணா அறிவாலயம் டி.ஸ்டீபன் – எஸ். தமிழரசி இல்ல மண விழாவில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்கள் எஸ். பொன்னரசன் என்கிற டேனியல் – டி.சகாய வெரோணிக்கா ஆகியோரை வாழ்த்தினார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஊழலைப்பற்றி பேசும் உத்தமரே – ஊரெங்கும் நடைபெறும்

# கொலைகளுக்கும் அமலாக்கத்துறைக்கும் என்ன தொடர்பு?

## முதலமைச்சர் விஜய்க்கு தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



**சென்னை, செப். 9 -**

**ஊழலைப்பற்றிப் பாடம் எடுக்கும் உத்தமரே! ஊரெங்கும் நடக்கும் கொலைகளுக்கும் அமலாக்கத்துறைக்கும் என்ன தொடர்பு? என தயாநிதி மாறன் காட்டமான கேள்வியை எழுப்பியுள்ளார்.**

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

அமலாக்கத்துறையில் அதிக வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் கட்சியோடு கூட்டணி வைத்திருப்பது யார்? அரசியல் காரணமாக அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு ஆவணங்களையும் முதலமைச்சர் அடுத்த முறை வாசிப்பாரா?

உலகநாடுகள் முன்னிலையில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தவர் என் தந்தை மறைந்த முரசொலி மாறன். வல்லரசு நாடுகளுடன் வாதிட்ட வல்லமையாளர். உள்ளூர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவே அஞ்சும் ஒரு முதலமைச்சர் மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களைப் பற்றிப் பேசலாமா? இன்று அவரைக் கொச்சைப்படுத்தும் முதலமைச்சர் அவர்கள், அதே முரசொலி மாறனின் மகனான எனது அழைப்பை ஏற்று, ஜனவரி 2006 இல், அப்போதைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற, "பொங்கல் சிறப்பு தபால் தலை" வெளியிடும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருந்த சமயத்தில்,

விஜய் மீது வருமான வரி வழக்கு நிலுவையில் உள்ளதால், அஞ்சல் தலை வெளியிடும் நிகழ்ச்சியில் விஜய் அவர்களை மேடையில் ஏற்றக் கூடாது என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எதிர்ப்பினை கடுமையாக தெரிவித்தப்போது, உடனடியாக அதற்கு ஆட்சேபனையைத் தெரிவித்து, விஜய் அவர்களை மேடையில் நிற்க வைத்து, தபால் தலையை பெறுவதற்கான உரிய மரியாதையை வாதாடி அவருக்கு பெற்றுத் தந்தது முரசொலி மாறன் மகன் தானே?

அந்த தபால் தலையை பெற்றுக் கொண்டு சிரிக்கும்போது, இப்போதைய ஞானோதயம் இல்லாமல் ஞானசூனியமாக இருந்தாரா?

முதலில், ஊழலைப் பற்றியோ மிசாவைப் பற்றியோ பேசும் அருகதை இந்த முதலமைச்சருக்கு உள்ளதா?

போர்பந்தரில் பிறந்தவரின் வாரிசாக தன்னைத் தானே யாரும் நினைத்துக் கொள்ளக்கூடாது. இந்த வீராதி வீரர் கொடநாட்டில் தனது திரைப் படத்திற்காக, ஒருநாள் முழுவதும் அங்கேயே காத்திருந்து, வீடியோவில் கைகட்டி வாய்பொத்தி முனகியதையும் மறந்து விடலாகாது.

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியவில்லை என்றால் இப்படித்தான் ஆகஸ்ட் 2026 இல் நடந்த கொலைகளுக்கு எமெர்ஜென்சி காலத்தில் அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணைய அறிக்கையில் பதில் தேட வேண்டியிருக்கும்!

தேடி முடிக்கும் முன் அடுத்த கொலைகள் நடந்தேறிச் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. குறித்து அவதூறு பேசுவதையே அரசியல் தகுதியாக கருதுகிறார் விஜய்!

# சத்தமாக சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல - சபையை சர்க்கஸ் கூடாரமாக மாற்றியிருக்கிறார்கள்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.9 -**

**தலைவர் கலைஞர், தி.மு.க.வை குறித்து அவதூறாக பேசுவதையே அரசியல் தகுதியாக இன்னும் எத்தனை காலத்துக்கு நினைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை என்றும், சத்தமாகச் சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல என்றும், சபையை சர்க்கஸ் கூடாரமாக மாற்றியிருக்கிறார்கள் என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தனது சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

வரலாற்றை பேச வேண்டும் என்றால் நீதிக்கட்சி காலத்தில் இருந்து துவங்க வேண்டும். நாங்கள் இந்தத் தமிழ்ச் சமூகத்துக்காக என்ன செய்தோம் என்பதிலிருந்து தொடங்க வேண்டும். அந்த வரலாறு குறித்து த.வெ.க.விற்கும், அதன் முதல்வர் ஜோசப் விஜய்க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

தலைவர் கலைஞரை பற்றியும், தி.மு.க.வை குறித்து அவதூறாக பேசுவதையே அரசியல் தகுதியாக



இன்னும் எத்தனை காலத்திற்கு நினைத்துக் கொள்ள போகிறார்கள் என்று தெரியவில்லை. எல்லாவற்றையும் நம்புவதற்கு ஒரு கூட்டம் இருக்கும் வரை, எதை வேண்டுமானாலும் பேசுவதற்கு ஒரு கூட்டமும் இருந்துக் கொண்டே தான் இருக்கும் என தனது பதிவில் கடுமையான விமர்சனத்தினை கனிமொழி முன்வைத்துள்ளார்.

அதோடு காவல்துறை மீதான மானிய கோரிக்கை விவாதத்திற்கு பதிலுரை அளிக்க வேண்டிய முதல்வர் எழுதிக் கொடுத்ததை படிப்பதை தவிர, நேரடியாக கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், நீண்ட சொற் பொழிவை நிகழ்த்தி விட்டு, எதிர்வினை வந்து விடுமோ என்கின்ற பயத்தில் சபாநாயகர் விவாதத்தையே தவிர்த்து இருக்கிறார்.

கடந்த மூன்று நாட்களாக காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்க ஒத்திகை பார்த்தும், அது தொடர்பாக முதல்வர் பேசியது சொற்பமே. மற்ற அனைத்தும் காலம் காலமாக பரப்பப்பட்ட வதந்திகளையும், சமீபத்திய வாட்ச் அப் பேக்டரி பொய்களையும் கலந்து, ஒரு பிரதியை முதல்வருக்கு கொடுத்து விட்டார்கள் என்றுதான் நினைக்க தோன்றுகிறது என விஜய்யின் பேச்சு குறித்து தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, சட்டம் ஒழுங்கு குறித்தும், குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு பற்றியும், பிற மக்கள் பிரச்சினைகள் குறித்தும் பேச வேண்டிய சபை, இன்று சர்க்கஸ்கூடாரமாகமாறியிருக்கிறது. ஒன்று மட்டும் சொல்லத் தோன்றுகிறது. Not everything loud is true (சத்தமாகச்சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல).

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. ஆட்சியில் காவல்துறையினர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தனர்!

# பேரவையில் முதல்வர் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு!

## சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ.கருணாநிதி மறுப்பு!

*சென்னை, செப். 9 -*

*தி.மு.க. ஆட்சியில் காவல்துறையினர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தனர் என்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் உண்மைக்கு மாறான முதலமைச்சரின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்தும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிக்கை விடுத்துள்ளார்.*

*இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு:-*

*நான் கடந்த 2016 முதல் 2026ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டுகள் பல்லாவரம் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினராக பணியாற்றியுள்ளேன் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க.வில் கழகப் பணியாற்றி வருகிறேன்.*

*எனது மூத்த மகன் ஆண்டோ மதிவாணன் எனது விருப்பத்திற்கு மாறாக பெசன்ட் நகரை சேர்ந்த அந்தோணி அவர்களின் இரண்டாவது மகள் மெர்லினா அன் அவர்களை காதலித்து வந்தார். அதன் பிறகு 20.01.2017 அன்று திருமணம் செய்து வைத்தேன்.*

*திருமணத்திற்கு பிறகு என் மகனும் மருமகளும் திருவான்மியூரில் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்தார்கள் அந்த*



*வீட்டிற்கு நான் நிகழ்ச்சிக்காக இரண்டு முறை மட்டுமே சென்று வந்தேன். மற்றபடி அவர்களுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த நிலையில் அந்த வீட்டில் பணி செய்த ரேகா என்ற பணிப் பெண்ணை மெர்லினா துன்புறுத்தியதாக 16.1.2024 அன்று நான் தொலைக் காட்சியில் பார்த்து அறிந்தேன்.*

*அடுத்த நாள் 17.01.2024 அன்று திருவான்மியூர் காவல் நிலைய அதிகாரிகள் இருவர் பாதிக்கப்பட்ட பெண்ணை நேரில் சென்று வாக்குமூலம் பெற்று, 18 .01.2024ல் முதல் தகவல் அறிக்கை எண்15/2024 பதியப்பட்டது.*

*இந்த உண்மையை மறைத்துவிட்டு சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் விஜய் அவர்கள், கடந்த 18.01.2024 அன்று சமூக வலைதளங்களிலும் ஊடகங்களிலும் வந்த பிறகு தான் 20.01.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அதிலிருந்து ஐந்து நாட்கள் கழித்து 26.01.2026 அன்று தான் கைது செய்யப்பட்டதாகவும் உண்மைக்கு மாறான தகவலை தெரிவித்திருக்கிறார்.*

*18.01.2024 அன்று காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். 24.01.2024 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதி அரசர் அவர்கள், மாவட்ட நீதிமன்றத்தில் 7 நாட்களுக்குள் சரணடைந்து ஜாமீன் பெற்றுக் கொள்ள உத்தரவு பிறப்பித்து இருந்தார். நீதிமன்ற உத்தரவு இருந்த பொழுதும் 25.01.2026 அன்று பள்ளிகொண்டா சுங்கச்சாவடி அருகில் காவல்துறையினர் அவர்கள் இருவரையும் கைது செய்தனர். இந்த தகவலை எல்லாம் மறைத்து உண்மைக்கு மாறான தகவலை முதல்வர் சட்டமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார்.*

*எனக்கும் மெர்லினா அன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் எந்த தொடர்பும் இல்லை. மெர்லினா அன் அவர்களும் சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகரன் அவர்களின் மருமகளுமான மார்சியா அன் அவர்களும் உடன்பிறந்த சகோதரிகள். அதனால் சபாநாயகர் குடும்பத்தில் மெர்லினா அன் நெருக்கமாக உள்ளார்.*

*லாட்டரி மார்ட்டின் அவர்களின் மனைவியும் அதிமு.கவின் சட்டமன்ற உறுப்பினருமான லீமா ரோஸ் அவர்களின் உறவினர் என்று சொல்லி, அவருடைய உதவியாளர் போல் தற்பொழுது மெர்லினா அன் வலம் வந்து கொண்டிருக்கின்றார். இதனை அவருடைய சமூக வலை தளங்களில் மற்றவர்கள் பார்க்கும் விதத்தில் பதிவிட்டு வருகிறார்.*

*உண்மை நிலை இப்படி இருக்க சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அவர்கள், இது சம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ள போது என்னை தொடர்பு படுத்தி உண்மைக்கு மாறாக பேசியிருக்கிறார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் அதைத் தொடர்ந்து துரிதமாக கைது செய்ததும் எவ்வித தாமதமும் இன்றி தி.மு.க ஆட்சியில் காவல்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டதும் உண்மை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*இவ்வாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

### 'பொய்க் குற்றச்சாட்டு' என நிரூபிக்கப்பட்ட

# சர்க்காரியா கமிஷன் அறிக்கையை பேரவையில் வாசிக்க வெட்கமாக இல்லையா?

## முதல்வருக்கு – சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

*நெல்லை, செப்.9 -*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறி யிருப்பதாவது:-*

*சட்டமன்றத்தில் 07.09.2026 ம்தேதி காவல் துறை மானியத்திற்கு பதில் அளித்த முதல்வர் தமிழக மாணவர், மாணவிகளை சீரழித்து வரும் போதைப் பொருள் கலாச்சாரத்தை கட்டுப்படுத்தவும், தமிழ் நாடு மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தி விற்பனை செய்து வரும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை கட்டுப்படுத்தவும் எந்த பதிலும் சொல்லாமல் இது 100 நாட்களில் உருவானதல்ல பல ஆண்டுகளாக வேரூன்றி இருக்கிறது என்று பொறுப்பற்ற பதில் சொல்லி கஞ்சா போன்ற போதை பொருள் கடத்தலுக்கும்,*



*விற்பனைக்கும் துணை நிற்கும் செயலில் ஈடுபட்டு விட்டீர்களே CM sir ?*

*தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, பாலியல் வன் கொடுமைகளை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதாக பதில் சொல்ல முடியாமல் 50 ஆண்டுகளுக்கு முன் பொய்க் குற்றச்சாட்டு என்று நிரூபிக்கப்பட்ட "சர்காரியா கமிஷன்" அறிக்கையை சட்டமன்றத்தில் வாசிக்க வெட்கமாக இல்லையா CMsir?*

*சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் எடுத்து வைத்த மக்கள் பிரச்சினைக்கு பதில் சொல்ல திராணியில்லாமல், தி.மு.க. மேடை பேச்சிகளை எடுத்து பதிலளிக்கும் முதல்வரே! உங்கள் அமைச்சரவை பெண் உறுப்பினர் அலைபேசி மூலம் "லட்சுமணன்" என்பவரை ஜட்டியோடு உட்கார வைத்து அடித்து கொன்று விடுவேன் என்று மிரட்டியதையும் சட்டமன்றத்தில் பேசி இருக்கலாமே CMsir?*

*தமிழ்நாட்டில் த.வெ.க. நிர்வாகிகளும், உறுப்பினர்களும் செய்து வருகின்ற கொலை,கொள்ளை போதை பொருள் விற்பனை பாலியல் சீண்டல் போன்ற வழக்குகள் மீது உறுதியான நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவிப்பதை விட்டுவிட்டு FIR பதிவு செய்து இருக்கிறோம் என அலட்சியமாக சொன்ன பதில் மக்களை ஏமாற்றும் செயல் இல்லையா CM sir?*

*நாட்டின் சட்டம் - ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க போகிறோம் என்பது பற்றி எந்த பதிலும் பேசாமல் அண்டை மாநில உதவியாளர்கள் எழுதிக் கொடுத்ததை சினிமா அங்க அசைவுகளோடு (நடித்து ) வாசித்து பொதுக்கூட்டத்தில் நான் காம் தர மேடைப் பேச்சாளரை போன்று தரம் தாழ்ந்து பேசியது சட்டமன்றத்தின் மாண்பை சந்திக்க வைத்து விட்டதே CM sir?*

*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.*

# ஆவடியில் இருளில் மூழ்கிய 2,000க்கும் மேற்பட்ட குடியிருப்புகள்!

## மின்வெட்டைக் கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்!

சென்னை, செப். 9 –

சென்னை அடுத்த ஆவடியில் 8 மணி நேரத்திற்கும் மேலாக மின் வெட்டு ஏற்பட்டதால் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் இருளில் மூழ்கின. இதனால் அவதியடைந்த பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்

ஆவடி வீட்டு வசதி வாரிய சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்குவதற்காக, 110 கிலோவாட் புதைவட மின் கேபிள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணியின் போது, பரித்திப்பட்டு அருகே பூமிக்கடியில் துளையிட்டதில் இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிகளில் பழுது ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக ஆவடி J.P. எஸ்டேட், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப் பட்டது. 8 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு நீடித்ததால் கடும் அவதிக்குள்ளான பொதுமக்கள் பொறுமையிழந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை தடுக்க வந்த காவல்துறையினருடன் பொதுமக்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் காரணமாக ஆவடி – பூந்தமல்லி பிரதான சாலையில் 2 மணி நேரத்திற்கும் மேலாக கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.